# Press Releases 2025

**12-09-2025**

தினகரன்

4/4

என்.ஐ.ஆர்.எப் தர வரிசையில்

## அழகப்பா பல்கலைக்கழகம் தமிழக அளவில் 3வது இடம்

### துணைவேந்தர் ரவி தகவல்



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் தேசிய கல்வி நிறுவன தரவரிசையில் சிறந்த இடத்தை பெற்றதற்கான சான்றினை துணைவேந்தர் ஜி.ரவியிடம் தரவரிசைப் பிரிவின் இயக்குநர் ஜெயகாந்தன் வழங்கினார். உடன் பதிவாளர் செந்தில்ராஜன் உள்ளார்.

காரைக்குடி, செப். 12: தேசிய கல்வி நிறுவன தரவரிசை அமைப்பு (என்.ஐ.ஆர்.எப்) தரவரிசையில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்குள் 44வது இடம், தமிழ்நாடு அளவில் 3வது இடத்தை பெற்றுள்ளது என துணைவேந்தர் ஜி.ரவி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், மத்திய கல்வி அமைச்சகத்தின் தேசிய கல்வி நிறுவன தரவரிசை அமைப்பு (என்.ஐ.ஆர்.எப்) கடந்த 2016ம் ஆண்டு முதல் பல்கலைக்கழங்களுக்கு இடையேயான தரவரிசையை வெளியிட்டு வருகிறது. இதில் கற்பித்தல் மற்றும் கற்பதற்கான வளங்கள், ஆராய்ச்சி மற்றும் தொழில்முறை பயிற்சி, பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் தேர்வு முடிவுகள், சர்வதேச வெளிப்பாடு மற்றும் உள்கட்டமைப்பு வசதி, கருத்துக் கணிப்புகள் ஆகிய 5 குறிப்பிட்ட பகுதிகளின் மதிப்பீடு செய்து தரவரிசைப்படுத்தி வருகிறது. தவிர ஆராய்ச்சி வெளியீடுகள் அதிகமான மேற்கோள்களையும் கணக்கில் எடுத்துக் கொள்கின்றனர். என்.ஐ.ஆர்.எப் தரவரிசைப் பட்டியலில் கலந்து கொள்வதற்காக பல்கலைக்கழக தரவரிசைப் பிரிவின் இயக்குநர் ஜெயகாந்தன் தலைமையிலான குழுவினர் 2025க்கான தரவுகளை பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகள் மற்றும் நிர்வாக பிரிவுகளிடம் இருந்து சேகரித்து சமர்ப்பித்து இருந்தனர். தற்போது 2025ம் ஆண்டுக்கான வெளியிடப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களுக்குள் இடையேயான என்.ஐ.ஆர்.எப் தரவரிசைப்பட்டியலில் அழகப்பா பல்கலைக்கழகம் அகில இந்திய பல்கலைக்கழங்களுக்குள் 44வது இடம், மாநிலபொதுப் பல்கலைக்கழக தரவரிசையில் 14வது இடம், பொதுப்பிரிவில் 4045 உயர்கல்வி நிறுவனங்களுக்குள் 73வது இடத்தை பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் இருந்து இந்திய உயர் கல்வி நிறுவன தரவரிசை, பல்கலைக்கழக தரவரிசையில் அழகப்பா பல்கலைக்கழகம் 3வது இடத்தை பெற்றுள்ளது. கடந்த 7 ஆண்டுகளாக பல்கலைக்கழக தரவரிசையில் முதல் 50 இடங்களுக்குள்ளும், பொதுப்பிரிவில் 100 இடங்களுக்குள்ளும் அழகப்பா பல்கலைக்கழகம் தரத்தை தக்க வைத்துக்கொண்டு இருக்கிறது. இந்த ஆண்டு தரவரிசையில் 14163 உயர் கல்வி நிறுவனங்கள் வெவ்வேறு பிரிவுகளில் கலந்து கொண்டன. தரவரிசையில் சிறந்த இடம் பெற செய்த பேராசிரியர்கள், ஆராய்ச்சி மற்றும் முதுகலை மாணவர்கள், அலுவலர்களை பாராட்டுகிறோம் என்றார்.

**23-08-2025**

தினகரன்



### மாணவர்களின் முன்னேற்றத்திற்காக

# புதிய பாடப்பிரிவுகள் துவங்கப்படுகிறது

## துணைவேந்தர் ஜி.ரவி தகவல்



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறையில், முதுகலை உயிரி வேதியியல் பாடப்பிரிவுக்கான வகுப்பறையை துணைவேந்தர் ஜி.ரவி திறந்து வைத்தார்.

**காரைக்குடி, ஆக.23:** காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறையின் சார்பில் முதுகலை உயிரி வேதியியல் பாடப்பிரிவு துவக்கவிழா நடந்தது. விழாவில், பாடப்பிரிவின் ஒருங்கிணைப்பாளர் உதவி பேராசிரியர் பூமி வரவேற்றார். பதிவாளர் செந்தில் ராஜன் முன்னிலை வகித்தார். துணைவேந்தர் ஜி.ரவி தலைமை வகித்து துவக்கிவைத்து பேசியதாவது: உயிரி வேதியியல் பாடப்பிரிவு மிகச் சிறந்த பாடப்பிரிவாகும். இங்குள்ள அனைத்து ஆராய்ச்சி உபகரணங்களையும் துறை பாகுபாடு இன்றி அனைத்து மாணவர்களும் பயன்படுத்தி கொள்ளலாம். ஒவ்வொரு கல்வியாண்டிலும் மாணவர்கள் புதுமை புத்திகளை கையாண்டு வளர்ச்சி பாதையில் முன்னேறும் வகையில் புதிய பாடப்பிரிவுகள் துவங்கப்படுகிறது.

புதிய முதுகலை பாடப்பிரிவுகளான கணினி தடயவியல், செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல், ஊட்டச்சத்து மற்றும் உணவு கட்டுப்பாடு. இந்த ஆண்டு உயிரிவேதியியல் மற்றும் பாலிமர் வேதியியல் பாடப்பிரிவுகள் துவங்கப்பட்டுள்ளது என்றார்.

உயிரி தகவலியல் துறைதலைவர் மூத்த பேராசிரியர் ஜெ.ஜெயகாந்தன் பேசுகையில், தேசிய தர மதிப்பீட்டில் அதிக தரப்புள்ளிகளை பெற்று இரட்டை முறை அங்கீகாரம் பெற்று முதல் பல்கலைக்கழகமாக இப் பல்கலைக்கழகம் உள்ளது. நவீன உள்கட்டமைப்பு ஆராய்ச்சி உபகரணங்கள், திறன் மேம்பாட்டுடன் கூடிய தொழில் முனைவு போன்ற வளர்ச்சி திட்டங்களையும், நிதி மேலாண்மையும், கழிவுநீர் சுத்திகரிப்பு, பசுமை வளாகத்தை உருவாக்குவது போன்ற எண்ணற்ற சாதனைகளை துணைவேந்தர் செய்துள்ளார் என்றார்.

**26-08-2025**

தினகரன் ராமநாதபுரம் / சிவகங்கை

அழகப்பா பல்கலையில்

# ரூ.5 கோடியில் புத்தாக்க மைய கட்டிடங்கள்

## முதல்வர் காணொலியில் திறந்து வைத்தார்

காரைக்குடி, ஆக.26: முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி வழியாக காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் ரூ.2 கோடியில் கட்டப்பட்ட புத்தாக்க வளர் மையம், ரூ.3 கோடியில் அழகப்பா அரசு பொறியியல் கல்லூரியில் கட்டப்பட்ட தேர்வு கூடக் கட்டிடத்தை திறந்து வைத்தார். தொடர்ந்து நடந்த நிகழ்ச்சியில் அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் ஜி.ரவி தலைமை வகித்தார். எம்எல்ஏ மாங்குடி குத்துவிளக்கு ஏற்றி மாணவர்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார். பதிவாளர் முனைவர் செந்தில்ராஜன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் முனைவர் ஜெயகாந்தன், முனைவர் சேகர், முனைவர் ராஜாராம், தேர்வாணையர் முனைவர் ஜோதிபாசு, தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் கண்ணபிரான், ரூசா இயக்குநர் முனைவர் பாலமுருகன், திறன் மேம்பாட்டு மைய இயக்குநர் முனைவர் தர்மன், பல்கலைக்கழக பொறியாளர் பாலா, காங்கிரஸ் மாநகர தலைவர் சண்முகதாஸ் , நகர செயலாளர் குமரேசன், வர்த்தக காங்கிரஸ் நிர்வாகி ஜெயபிரகாஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் எம்எல்ஏ மாங்குடி பேசுகையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்த அழகப்பா பல்கலைக்கழக புத்தாக்க வளர்மைய கட்டிடத்தை துணைவேந்தர் ஜி.ரவி, எம்எல்ஏ மாங்குடி ஆகியோர் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தனர்.

ஒவ்வொரு மாணவரும் கல்வியில் சிறந்த விளங்கி தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்பதே முதல்வரின் எண்ணம். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத பல்வேறு சிறப்பான திட்டங்கள் தமிழ்நாட்டில் மட்டுமே உள்ளது. அரசு பள்ளிகளில், கல்லூரிகளின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் அழகப்பா பொறியியல் கல்லூரிகளில் ரூ 5 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்துள்ளார். அரசு பள்ளிகள் அனைத்து பெருமையின் அடையாளமா க மாறி உள்ளது. அரசு பள்ளி மாணவர்கள் அனைத்து துறைகளிலும் சாதித்து வருகின்றனர். அனைத்து வசதிகளுடன் கூடிய அரசு கல்வி நிறுவனங்களில் படிக்கிறோம் என்ற பெருமையுடன் மாணவர்கள் இருக்க வேண்டும் என்றார்.